**செய்தி வெளியீடு எண் : 549** **நாள்: 06.04.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள், இன்று (06.04.2022) சென்னை, எழிலகம், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகத்தில், காலஞ்சென்ற அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு 13 இளநிலை உதவியாளர், 4 நில அளவர், 1 வரைவாளர் என மொத்தம் 18 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. குமார்ஜெயந்த், இ.ஆ.ப., நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் டாக்டர். டி.ஜி.வினய், இ.ஆ.ப. மற்றும் அரசு உயர் அலுவர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு அரசின் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகம் 150 ஆண்டுகள் கடந்த மிகவும் பழமையான துறைகளில் ஒன்றாகும். இத்துறையானது, நிலஅளவை பிரிவுகள், நிலஅளவை குறியீடு, நிலஆவணங்கள் பராமரித்தல், நில உரிமை மற்றும் பின்னர் அதில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றை உரியப் பதிவேடுகளில் பதிவு செய்தல், போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகத்தின் பணிகள் தொய்வின்றி சீரிய முறையில் தொடர்ந்திட, இத்துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்களை தமிழ்நாடு அரசு உடனுக்குடன் நிரப்பி வருகிறது. இதன் அடிப்படையில் காலஞ்சென்ற அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் பொருட்டு, 13 இளநிலை உதவியாளர், 4 நில அளவர், 1 வரைவாளர் என மொத்தம் 18 நபர்களுக்கு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் பணி நியமன ஆணைகளை இன்று (06.04.2022) வழங்கினார்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in